# யூன் – 13 – வியாழன்

## புனித பதுவை அந்தோனியார்

**“அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு” லூக்கா 10 : 2**

---

## முதல் வாசகம் : ஏசாயா 61 :1 – 13

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும், நம் கடவுள் அநீதிக்குப் பழிவாங்கும் நாளை அறிவிக்கவும், துயருற்று அழுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும், சீயோனில் அழுவோர்க்கு ஆவன செய்யவும், சாம்பலுக்குப் பதிலாக அழகுமாலை அணிவிக்கவும், புலம்பலுக்குப் பதிலாக மகிழ்ச்சித் தைலத்தை வழங்கவும், நலிவுற்ற நெஞ்சத்திற்குப் பதிலாகப் ”புகழ்” என்னும் ஆடையைக் கொடுக்கவும் என்னை அனுப்பியுள்ளார். ”நேர்மையின் தேவதாருகள்” என்றும் ”தாம் மாட்சியுறுமாறு ஆண்டவர் நட்டவை” என்றும் அவர்கள் பெயர் பெறுவர். நெடுங்காலமாய் இடிந்து கிடந்தவற்றை அவர்கள் கட்டியெழுப்புவார்கள் முற்காலமுதல் பாழாய்க் கிடந்தவற்றை நிலைநிறுத்துவார்கள் தலைமுறை தலைமுறையாக இடிந்து அழிந்துகிடந்த நகர்களைச் சீராக்குவார்கள்.அன்னியர் உங்கள் மந்தையை மேய்த்து நிற்பர். வேற்று நாட்டு மக்கள் உங்கள் உழவராயும் திராட்சைத் தோட்டப் பணியாளராயும் இருப்பர்.நீங்களோ, ஆண்டவரின் குருக்கள் என்று அழைக்கப்படுவீர்கள். நம் கடவுளின் திருப்பணியாளர் என்று பெயர் பெறுவீர்கள். பிறஇனத்தாரின் செல்வத்தைக் கொண்டு நீங்கள் உண்பீர்கள். அவர்களின் சொத்தில் நீங்கள் பெருமை பாராட்டுவீர்கள்.அவமானத்திற்குப் பதிலாக நீங்கள் இருபங்கு நன்மை அடைவீர்கள் அவமதிப்புக்குப் பதிலாக உங்கள் உடைமையில் மகிழ்வீர்கள் ஆதலால், நாட்டில் உங்கள் செல்வம் இருமடங்காகும் முடிவில்லா மகிழ்ச்சியும் உங்களுக்கு உரியதாகும்.ஆண்டவராகிய நான் நீதியை விரும்புகின்றேன். கொள்ளையையும் குற்றத்தையும் வெறுக்கின்றேன். அவர்கள் செயலுக்கு ஏற்ற கைம்மாற்றை உண்மையாகவே வழங்குவேன். அவர்களுடன் முடிவில்லா உடன்படிக்கை செய்து கொள்வேன். அவர்கள் வழிமரபினர் பிறஇனத்தாரிடையேயும், அவர்கள் வழித்தோன்றல்கள் மக்களினங்கள் நடுவிலும் புகழ் அடைவார்கள். அவர்களை காண்பவர் யாவரும் அவர்களை ஆண்டவரின் ஆசிபெற்ற வழிமரபினர் என ஏற்றுக்கொள்வார்கள்.ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன் என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும் மலர்மாலை அணிந்த மணமகன் போலும், நகைகளால் அழகுபடுத்தப்பட்ட மணமகள் போலும், விடுதலை என்னும் உடைகளை அவர் எனக்கு உடுத்தினார் நேர்மை என்னும் ஆடையை எனக்கு அணிவித்தார்.நிலம் முளைகளைத் துளிர்க்கச் செய்வது போன்றும், தோட்டம் விதைகளை முளைக்கச் செய்வது போன்றும், ஆண்டவராகிய என் தலைவர் பிற இனத்தார் பார்வையில் நேர்மையும் புகழ்ச்சியும் துளிர்த்தெழச் செய்வார்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றென்றும் பாடுவேன்

## நற்செய்தி : லூக்கா 10 : 1 - 9

அக்காலத்தில் ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம்போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார்.அப்போது அவர் அவர்களை நோக்கிக் கூறியது. ”அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்.பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.நீங்கள் எந்தவீட்டுக்குள் சென்றாலும், ”இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!” என முதலில் கூறுங்கள்.அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும்.அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்தவீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம்கூலிக்கு உரிமை உடையவரே வீடுவீடாய்ச் செல்லவேண்டாம்.நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள்.அங்கு உடல்நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது எனச்சொல்லுங்கள்” என்றார்.

**தியானம்:** இன்று நாம் 1195முதல் கடந்த 1231வரை வாழ்ந்த பதுவைப் புனிதரரது திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். “உனக்குள்ள அனைத்தையும் விட்டு விட்டு என்னைப் பின்செல்” என்ற நற்செய்திக்கமைவாக பதுவைப் புனிதர் வாழ்ந்ததால். இவருக்கு இறையழைப்பு பலதடவைகளில் கிடைத்தது. சிறுவயதில் லிஸ்பன் நகரில் சுகபோக வாழ்வைவிட்டு புனித அகஸ்தீன் சபையில் இணைந்துகொண்டார். பின்னர் இத்தாலிக்குச் சென்று ஒரு சில துறவிகளுடன் கடுமையான துறவற வாழ்வில் செபிப்பதிலும், நற்செய்தி ஏடுகளை வாசிப்பதிலும் ஈடுபட்டார். அக்காலத்தில் ஒரு குருத்துவ அபிசேகத்தில் பிரசங்கம் செய்வதற்கு பொருத்தமான எவருமே இல்லாத வேளையில் கிடைத்த வாய்ப்பு இப்புனிதரது வாழ்க்கையை மாற்றியமைத்தது. தொலைந்துபோன பொருட்களைக் காட்டிக் கொடுப்பதில் பிரசித்தி பெற்றவராக இப்புனிதர் அன்னை மரியாவிற்கு அடுத்ததாக இலங்கையிலும் இந்தியாவிலும் இந்து மத சகோதர சகோதரிகளை தனது திருத்தலத்திற்கு வரவழைப்பவராகவும் இருக்கின்றார். இன்று நற்செய்தியில் இறைமகன் இயேசு தமது சீடர்களை நற்செய்திப் பணிக்காக அனுப்பு முன்னர் அவர்கள் சந்திக்க நேரிடும் அனுபவங்களைக் குறிப்பிடுகிறார். இதற்கமைவாக நாம் கிறிஸ்துவுக்காக வாழ்வது மட்டுமல்ல மற்றவர்களையும் அவ்வாழ்விற்குள் ஈர்க்கும் கருப்பொருட்களாக மாற்றமடைய அழைக்கின்றார். நாம் என்ன துறவிகளா? எதற்காக நாம் துறவற வாழ்வு வாழவேண்டும் என்று நாங்கள் நினைக்கலாம். எங்களைப் போன்ற ஒரு மனிதப்பிறவிகளான திருச்சீடர்களால் முடியுமாயின் எம்மால் ஏன் முடியாது? எனவே இவ்வுலக செல்வங்களை குப்பை என ஒதுக்குவோம். “இறையாட்சி நெருங்கிவிட்டது” என விசுவசிப்போம். நாமும் நற்செய்தியை அறிவிக்கும் கருவிகளாக செயல்பட்டு நற்செய்திக்கு சாட்சிகளாக வாழுவோம். கிறிஸ்துவின் சீடர்களாவோம்..